2018

No. of Printed Pages : 3

2018

101564 **8101**

Register Number

முதலாம் ஆண்டு

# கற்கும் குழந்தை

First Year

# THE LEARNING CHILD

(Tamil Version)

நேரம் : 3 மணி

மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

பகுதி - அ

I. **அனைத்து** வினாக்களுக்கும் 100 **வார்த்தைகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **15x2=30**

1. மனித உடல் வளர்ச்சியில் இன்சுலின் பங்கு யாது ?

2. உடல் வளர்ச்சியை பாதிக்கும் அடிப்படைக் காரணிகள் யாவை ?

3. சார்பெண்ணங்கள் என்றால் என்ன ?

4. தற்கருத்து வளர்ச்சியினை தீர்மானிக்கும் சமூக காரணிகள் நான்கினை எழுதுக.

5. நுண்ணறிவு பற்றிய வெக்ஸ்லரின் கூற்று யாது ?

6. பெற்றோர்கள் கடைப்பிடிக்க வேண்டிய மூன்று 'A' -க்கள் யாவை ?

7. ஒரு சில குழந்தைகள் மட்டும், ஆசிரியர்களையும் மற்றும் பள்ளியையும் வெறுப்பதற்கான காரணங்கள் நான்கினை எழுதுக.

8. இலட்சியத்தின் வகைகள் யாவை ?

[ Turn over

9. அறிதலை அறிந்துணர்தலின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.

10. கற்றலும் ஊக்குவித்தலும் ஒன்றுக்கொன்று எவ்வாறு தொடர்புடையது ?

11. முயன்று தவறிக் கற்றல் பற்றி எழுதுக.

12. பொதுமைக் கருத்துப் படங்கள் பற்றி எழுதுக.

13. கற்றலுக்கான சமூகக் காரணிகள் பற்றி நீவீர் அறிவன யாவை ?

14. தற்போதைய பள்ளி பாடப் புத்தகங்களில் காணப்படும் ஏதேனும் இரண்டு குறைபாடுகளை எழுதுக.

15. கற்றல் பாணியைப் பொறுத்து மாணவர்களை எவ்வாறு வகைப்படுத்துவாய் ?

## பகுதி - ஆ

**II. எவையேனும் 10** வினாக்களுக்கு **200 வார்த்தைகளுக்கு மிகாமல்** விடை அளிக்கவும்.

**10x4=40**

16. ஹார்மோன்கள் குறைவாக சுரப்பதாலும், அதிகமாக சுரப்பதாலும் உடல் வளர்ச்சியில் ஏற்படும் குறைபாடுகள் யாவை ?

17. மாணவர்களிடம் கவலை ஏற்படுத்தும் காரணிகளை குறிப்பிடுக.

18. தார்ண்டைக் கூறும் நுண்ணறிவின் வகைகளை விவரி.

19. ஒப்பார் குழுவினை கொண்டு கற்றலை எவ்வாறு மேம்படுத்துவாய் ?

20. வகுப்பறை சூழலில் குழந்தைகளுக்கு எவ்வாறு ஒழுக்கப் பயிற்சியினை ஆசிரியர் நடைமுறைப்படுத்தலாம் ?

21. பியாஜேயின் மூன்றாம் நிலையான கருத்தியல் நிலை பற்றி எழுதுக.

22. முந்தைய அறிவுடன் புதிய அறிவை இணைத்து கற்றல் பற்றி விளக்குக.

23. தார்ண்டைக்கின் கற்றல் விதிகளை விளக்குக.

24. பொதுமைக் கருத்துப் படங்களின் கல்விப் பயன்களை எழுதுக.

25. ஒரு சிறந்த ஆசிரியரிடம் காணப்படும் பண்பு நலன்கள் யாவை ?

26. கற்பிக்கும் பாடத்தை விட கற்போரின் மீது ஏன் கவனம் செலுத்த வேண்டும் ?

27. மாணவர்களின் சிறப்பான கற்றலுக்கு தேசிய கலைதிட்டம் வரைவு 2005 எவ்வாறு உதவுகிறது ?

## பகுதி - இ

**III.** கீழ்க்கண்ட வினாக்களுக்கு **500 வார்த்தைகளுக்கு மிகாமல்** விடை தருக. **3x10=30**

28. (அ) மாணவ ஆசிரியராகிய நீவீர் தொடக்கப்பள்ளி குழந்தைகளுக்கு பாடங்கள், ஆசிரியர்கள், பள்ளி மற்றும் பிற மாணவர்கள் மீது விருப்பு மற்றும் வெறுப்பு ஏற்படுவதற்கான காரணங்கள் பற்றி தங்களது கருத்தை எழுதுக.

**அல்லது**

(ஆ) குமரப்பருவத்தில் தோன்றும் பிரச்சினைகள் பற்றி மாணவ ஆசிரியரான தங்களின் கருத்துக்களை எழுதுக.

29. (அ) எரிக்சனின் மன - சமூக கோட்பாட்டின் படிநிலைகளைச் சான்றுடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) குழந்தைகளிடம் ஏற்படுத்த வேண்டிய கற்றல் பழக்கங்களை எழுதுக.

30. (அ) கற்றலின் வகைகளைப் பற்றி மாணவ-ஆசிரியராகிய நீவீர் பொருத்தமான சான்றுடன் எழுதுக.

**அல்லது**

(ஆ) குழந்தைகளின் கற்றலுக்கு உதவும் காரணிகளை விளக்குக.

-oOo-